1990 மார்ச் 19]

ஒன்றியங்களைப் பிரிக்கக்கூடாது என்ற தடை உத்தரவு அரசிடமிருந்து இருக்கிறது. அந்தத் தடையை நீக்க அரசு முன் வருமா? அத்தோடு இன்றைக்கு மக்கள் தொகை கணக்கு எடுப்புத் தடை என்ற வகையிலே ஒரு தடை இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். அத்தோடு நம்முடைய அரசினுடைய தடையும் இருக்கிறது. அதை நீக்குவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு. . . . . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று பல முறை முயற்சித்தும் மத்தியில் இருக்கிற ஆட்சி மக்கள் தொகை கணக்கு எடுப்பு முக்கியம் என்பதை மனத்தில் கொண்டு, அந்தத் தடையை தளர்த்துவதற்கு இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. கோ. வீரையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி தமிழகத்தில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியமும் அப்படி பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பவும்.

திரு. அ. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெரிய ஒன்றியங்களில் தென் ஆற்காடு மாவட்டம் வானூர் தொகுதியில் உள்ள வானூர் ஒன்றியமும் ஒன்று. அறுபத்தியேழு. . . . . (மணியடிக்கப் பட்டது).

பெரியகுளம் நகரில் புதிதாகப் பேருந்து நிலையம் கட்டுதல்.

*3549—திரு. எல். மூக்கையா: மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) பெரியகுளம் நகரில் புதிதாக பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) ஆம்.

(ஆ) பொதுப்பணித் துறையால் விவர மதிப்பீடுகள் தயாரித்து. தொழில் நுட்ப அனுமதி வழங்கி ஒப்பந்தம் முடிவு செய்தபின் இப்பணி தொடங்கும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தில் பேருந்து நிலையம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படுமா? ஆரம்பித்து எவ்வளவு காலத்திற்குள் முடித்துத் தரப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நகர மன்றத்தினுடைய தீர்மானம் 50 லட்சம் செலவில் கட்டப்பட வேண்டும் என்று கேட்டு, முதற்கட்டப் பணிக்காக 25 லட்சம் ரூபாய் கடன் வழங்க நகர ஊரமைப்பு வாரியம் 9–1–1989-இல் அனுமதி அளித்திருக்கிறது என்றாலும் அதற்கான விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாரியப் பொறியாளருக்கு தகவல் அனுப்பப்பட்டு அவர் அதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அது முடிந்த உடன் உடனடியாக எல்லாக் காரியங்களும் நடைபெறும்.

திரு. ரெ. பிச்சைமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் பேருந்து நிலையம் கட்டும்பணி போல தமிழகத்தில் நடப்பு ஆண்டில் எத்தனைப் பேருந்து நிலையங்கள் கட்டப்பட இருக்கின்றன. அந்த வகையிலே பெரம்பலூரைப் பொறுத்த வரையில்..... (மணியடிக்கப்பெற்றது).

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் சம்பந்தமாக இருக்கிறது என்ற காரணத்தால் ஒரு கேள்வி. தமிழகத்தினுடைய பல்வேறு இடங்களில் உள்ள பேருந்து நிலையங்களில் பயணிகள் பயன்படுத்துவதற்கு இடையூறாக வருவாய் நோக்கத்தோடு காலி இடங்களை வியாபாரிகளுக்குக் கொடுத்து, பயணிகள் அமருகிற இருக்கை களைக் கூட வியாபாரிகளுக்குக் கொடுத்து, வாடகைக்கு விடுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் பயணிகள் பேருந்து நிலையங்களைப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக் கிறது. அதைத் தடுக்கும் வகையில் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாநகராட்சியில் எந்தெந்தப் பேருந்து நிலையத்தில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை விளக்கி எழுதுவார்களேயானால் உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

9–40 மணி

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரே ஒரு பஸ் நிலையம் மட்டும் உள்ள தொகுதிகள் எத்தனை? அவற்றில் மேற்கொண்டு பஸ் நிலையங்கள் கட்ட அரசு விசேஷ அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி அளிக்கும்.